செய்தி வெளியீடு எண்: 449 நாள் : 30.08.2014

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.8.2014 அன்று தலைமைச் செயலகத்தில், மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் காலியாகவுள்ள 12 உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்களை பேணிக்காப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. போரில் உயிரிழந்த படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு உயர்த்தப்பட்ட கருணைத் தொகை, அவர்களின் மகள் திருமணத்திற்கு உயர்த்தப்பட்ட திருமண மானியம், குடும்பத்தினருக்குக் கருணை அடிப்படையிலான பணிநியமனம், கோயில் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு உயர்த்தப்பட்ட தொகுப்பூதியம் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

முன்னாள் படைவீரர்களின் அனைத்து நலத்திட்டப் பணிகளும் 29 மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டப் பணிகளை மேலும் செம்மையான முறையில் செயல்படுத்தும் பொருட்டு மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் காலியாக உள்ள 12 உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு முப்படைகளை சேர்ந்த அலுவலர்கள் மற்றும் முன்னாள் முப்படை அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு உயர்மட்ட தேர்வு குழுவால் நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்ட 12 உதவி இயக்குநர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கும் அடையாளமாக 7 உதவி இயக்குநர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு செல்லூர் கே. ராஜு, தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திரு யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., பொதுத் துறை கூடுதல் செயலாளர் / முன்னாள் படை வீரர் நல இயக்குநர் திரு வெ. பழனிக்குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 30.8.2014